செ.வெ.எண்.21 நாள்.09.10.2017.

**திருநெல்வேலி பிஎஸ்என் பொறியியல் கல்லூரியில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாநில அளவிலான 35வது பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார்.**

-------

திருநெல்வேலி பிஎஸ்என் பொறியியல் கல்லூரியில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாநில அளவிலான 35வது பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.10.2017) நடைபெற்றது. விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, மாநில அளவிலான பாரதியார் தின குழு போட்டிகளை தொடங்கி வைத்தார். திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் முன்னிலை வகித்தார். இவ்விழாவில், மாவட்ட அளவில் தூய்மையான சுற்றுச்சூழல் சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற 9 மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், மாநில மாவட்ட அளவிலான தூய்மை பள்ளிக்கான விருது 8 பள்ளிகளுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைக்கும் முகமாக டேபிள் டென்னிஸ் போட்டிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், திருநெல்வேலி மாவட்டத்தில் மாநில அளவிலான 35வது பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது மகிழ்ச்சிக்குரியதாகும். ஓவ்வொரு குழந்தைக்கும் கல்வி எவ்வளவு முக்கியமோ அதுபோன்று விளையாட்டும் மிக முக்கியமான ஒன்றாகும். விளையாட்டினால் உடல் ஆரோக்கியம் ஏற்படுகிறது. மனம் ஒருமுகம் பட்டு உயர்ந்த எண்ணங்களும், குழு மனப்பான்மையும் வளரும். தலைமை பண்பு வளரும். விளையாட்டுகளில் வெற்றி பெறும்போது குடும்பங்கள் மகிழ்ச்சியடைவதுடன், மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்கும். எனவே, இளம் தலைமுறையினர் விளையாட்டினை நேசிக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளையாட்டினை ஊக்கப்படுத்தும் வகையில் பலத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். சென்னையில் நேரு உள் விளையாட்டு அரங்கத்தினை அமைத்தார்கள். விளையாட்டுப் போட்டிகளில் சாதனைப் படைத்தவர்களுக்கு பரிசுகளை வாரி வழங்கினார்கள். இந்தியாவில் மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கிட பல்வேறு வசதி வாய்ப்புகளும், திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள அனைவருக்கும், வெற்றி பெறவுள்ளவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருக்குள்ளும் மாரியப்பனை போல ஒரு வெற்றி வீரர் ஒளிந்திருக்கலாம். எனவே, வெற்றி பெறும்வரை போராட வேண்டும். பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு புதுமைகளையும், எழுச்சியையும், மாற்றத்தையும் தமிழக அரசு செய்துள்ளது. நீங்கள் எல்லா வளமும், நலமும் பெற்று வெற்றிபெற வாழ்த்துகிறேன் என பேசினார்.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், மாநில அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் 09, 10, 11 ஆகிய மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. பிஎஸ்என் பொறியியல் கல்லூரியில் வாலிபால், பேஸ்கட் பால், கேன்ட் பால், ஹாக்கி, கபாடி, பால் பேட்மிட்டன், டேபிள் டென்னிஸ் ஆகிய ஏழு போட்டிகளும், ஸ்காட் பொறியியல் கல்லூரியில் துரோ பால், புட்பால் ஆகிய இரண்டு போட்டிகளும், பாளையங்கோட்டை கிறிஸ்துராஜா மேல்நிலைப்பள்ளியில் கேன்ட் பால் (பெண்கள்) போட்டிகளும்,

அண்ணா விளையாட்டு அரங்கில் ஆண்களுக்கான புட்பால் மற்றும் ஹாக்கிப் போட்டிகளும் நடைபெறுகிறது. விளையாட்டினால் உடல், மனம் ஆரோக்கியம் பெறுகிறது. இதன் மூலம் கல்வியிலும் சிறந்து விளங்க முடியும். உடல் நல்ல நிலையில் இருந்தால்தான் கல்வியிலும் சிறந்து விளங்க முடியும். விளையாட்டுகளில் திறமையாக உள்ளவர்களுக்கு பொறியியல் சேர்க்கை மற்றும் உயர் கல்வியில் முன்னுரிமையில் இடங்கள் வழங்கப்படுகிறது. மேலும், போட்டித் தேர்வுகளிலும் சலுகை மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. போட்டிகளில் வெற்றி பெறுவதை விட பங்கேற்பது தான் மிக முக்கியமானதாகும். இப்போட்டிகளில் பங்கேற்றுள்ள அனைவரையும் வெற்றி பெற வாழ்த்துகிறேன் என பேசினார்.

இவ்விழாவில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி முருகேசன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், நாட்டு நலப்பணித்திட்ட இணை இயக்குநர் திரு.கே.செல்வகுமார், பிஎஸ்என் குழும சேர்மன் திரு.சுயம்பு, ஸ்காட் குழும சேர்மன் திரு.கிளிட்டஸ் பாபு, மாநில கூட்டுறவு இணைய தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, பாளை நகர கூட்டுறவு சங்க தலைவர் திரு.சுதா பரமசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி–தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் சங்க தலைவர் திரு.ஆறுமுகம், அக்ரோ தலைவர் திரு.மகபூப்ஜான், நெல்லை கூட்டுறவு பேரங்காடி தலைவர் திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.சுதா பரமசிவம், திரு.கபேரியல் ராஜன், திருமதி.பார்வதி பாக்கியம், திரு.செந்தில் ஆறுமுகம், மாவட்ட கல்வி அலுவலர்கள், மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.